திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இந்தப் புகார் குழுக்களின் அலுவல்கள் என்னென்ன, கடமைகள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுவாக மக்கள் குறைகள், கோரிக்கைகள் தெரிவித்தால் உடனடியாகக் கவனிக்க வேண்டும். தவிர்க்க முடியாத தாமதங்கள் ஏற்படுகின்றன என்றாலும் அவற்றைக் கவனிக்க என்று ஒரு தனி அதிகாரி இப்பொழுது செக்ரடேரியட்டில், போர்ட் ஆஃப் ரெவின்யூவில் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்—அவர்கள் கவனித்தால் அவைகள் சீக்கிரம் கவனிக்கப்படும். அதே போல கலெக்டர் காரியாலயங் களிலும், இதற்கென்று தனி அதிகாரி நியமிக்கப்படாவிட்டாலும், இருக்கிற அதிகாரிகளில் ஒருவர் இவற்றில் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி, மக்களுடைய குறைகளைக் கவனிக்க வேண்டும் என்று தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் நோக்கம்.

திரு. கே. ஏ. மதியழகன்: கலெக்டர் அலுவலகங்களிலே இப்பொழுது நியமிக்கப் பட்டிருக்கிற அதிகாரிகள் அவர் கீழேயே வேலை செய்யும் அதிகாரியாக இருப்பதால், இந்தப் புகார்களை அவர்கள் விசாரிப்பதால் தக்க பலன் ஏற்படும் என்று சர்க்கார் கருதுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கலெக்டர்தான் இதற்கெல்லாம் பொறுப்பு. ஆகையினால் அவர் பார்த்து, தகுந்த அதிகாரியை நியமிக்கப் போகிறார். இதற்கென்று ஒரு தனி அதிகாரியைப் போட்டு அதனால் அதிகமான செலவுக்கு இடம் வைக்க வேண்டாம் என்பதுதான் கருத்து. கலெக்டருக்கே பொறுப்பு இருப்பதால் வேண்டியதை அவரே செய்யக்கூடும் என்று சர்க்கார் நம்புகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், செக்ரடேரியட்டில் இருக்கக் கூடிய ஒவ்வொரு இலாகாவிற்கும் தனித்தனியாகக் குழுக்கள் இருக்கின்றனவா அல்லது செக்ரடேரியட்டில் உள்ள அத்தனை இலாகாக்களுக்கும் சேர்ந்து ஒரு குழுவா என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லா இலாகாக்களுக்கும் சேர்த்துத்தான் ஒரு அதிகாரி என்று போடப்பட்டிருக்கிறது.

சர்க்கரை ஆலைகள்

*42. கேள்வி—புலவர். கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:

(அ) தமிழகத்தில் இடம் பெற்றிருக்கும் சர்க்கரை ஆலைகள் எத்தனை?

(இ) அவற்றில் ஆண்டொன்றிற்குச் சராசரி எவ்வளவு சர்க்கரை உற்பத்தி ஆகிறது?

21st January 1965]

(உ) புதிய ஆலைகள் மேலும் துவக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சென்னை மாநிலத்தில் தற்போது 10 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

(இ) 1963-64ம் வருடத்தில் 142,660 டன் சர்க்கரை உற்பத்தியாயிற்று.

(உ) ஐந்து புதிய ஆலைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் சில ஆலைகள் நிறுவ மத்திய சர்க்காரை அனுமதி கோரியிருக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன்: நம்முடைய மாநிலத்தின் சர்க்கரைத் தேவையில் இந்த உற்பத்தி எத்தனை சதவிதமாக இருக்கிறது? வெளியிலேயிருந்து நமக்கு வருகிற சர்க்கரையின் அளவு என்ன என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நமக்கு வெளியிலிருந்து சர்க்கரை வந்து கொண்டுதான் இருக்கிறது. தேவை என்ன என்று கணக்கு இப்பொழுது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், புதியதாக நிறுவப்படும் ஆலைகள் எந்தெந்த மாவட்டத்தில் அமைப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஐந்து புதிய ஆலைகள் கட்டப்பட்டு வருகின்றன என்று சொன்னேன். அவை (1) Kallakurichi Co-operative Sugar Mills, (2) National Co-operative Sugar Mills, Alanganallur, Madurai district, (3) Aruna Sugars, Pennadam, (4) Sakthi Sugars, Appakudal and (5) South India Steel and Sugars Limited, Mundiambakkam—என்று கட்டப்பட்டு வருகின்றன. புதிதாக ஆரம்பிக்க, லைசென்ஸ் கோரியிருக்கும் மூன்று கூட்டுறவு மில்களும், நான்கு தனியார் மில்களும் பரிசீலனை செய்யப்பட்டு, உத்தரவு கிடைக்கவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: சார், சர்க்கரை ஆலைகள் புதிதாக அதிகமாக ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டு இருப்பதால், நெல் விளைவு குறைந்து, கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப் பட வேண்டிய அவசியம் ஏற்படுவதால், அதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பதை சர்க்கார் அறிவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பாதிக்கப் படாது என்று சர்க்கார் நினைக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், மத்திய சர்க்காரில் அனுமதி கோரி புதிய ஆலைகளை எங்கெங்கே வைப்பதாக உத்தேசம்? 50 டன், 100 டன் கபாசிடி உள்ள புதிய ஆலைகளை வைக்க யார் யாருக்கு லைசென்சுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்று அமைச்சர் தெரிவிப்பாரா?

[21st January 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அனுமதி பெறுவதற்கு முன்னால், ஜனங்களுக்கு ஒரு 'எக்ஸ்பெக்டேஷனை'—அதற்கு தமிழ் என்ன சொல்வது (திரு. கே. ஏ. மதியழகன்—ஆவல்) ஆவலை உண்டாக்குவது சரியாக இருக்காது. 100 டன்னுக்குக் குறைவாக உள்ள ஆலைகளுக்கு இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்ட் அனுமதி லைசென்ஸ் தேவையில்லை. அப்படி கோரிக்கை வந்தால் இராச்சிய சர்க்காரே உத்தரவு கொடுக்கிறோம்.

திருமதி சி. குழந்தை அம்மாள்: தலைவர் அவர்களே, சிறிய மில்களில் உற்பத்தியாகும் கந்தசாரி சர்க்கரையின் விலை, சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகும் சர்க்கரையின் விலையைவிட கிலோவுக்கு ஒரு ரூபாய், பதினைந்து அணா அதிகமாக இருக்கிறதே அதற்குக் காரணம் என்ன? அதைக் குறைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிறிய ஆலைகளுக்கு எக்ஸைஸ் ட்யூடி கிடையாது. சில சலுகைகள் உண்டு. கண்ட்ரோல் கிடையாது. அந்த விலையைக் குறைக்க இஷ்டம் இல்லை. சிறிய ஆலைகள் ஓரளவுக்கு வர வேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம்.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: செங்கல்பட்டு மாவட்டம் படாளத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்தில் நடைபெற்று வருகிறது. அதற்குக் காரணம் என்ன என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எந்தத் தொழிலாக இருந்தாலும், ஆரம்பித்தவுடன் லாபமாக இருக்காது. அதோடு நாம் இப்பொழுது அதிகமாக டிப்ரிசியேஷன் போடுகிறோம். மூன்று, நான்கு வருஷங்களுக்குப் பிறகு தான் லாபக் கணக்குப் பார்க்க முடியும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: சார், புதிதாக அமைக்க இருக்கும் கூட்டுறவு மில்களில் ஒன்றை, கிழக்கு ராமநாதபுரம் பிற்பட்ட பகுதியாக இருப்பதை முற்படுத்த, அங்கே அமைக்க உத்தேசிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம். திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைப் பற்றித் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: சார், இப்பொழுது கட்டப்பட்டு வருகிற சர்க்கரை ஆலைகளில் எத்தனை கூட்டுறவுத் துறையில் இருக்கும், எத்தனை தனியார் துறையில் இருக்கும் என்பதை விளக்கக் கோருகிறேன். இனிமேல் நிறுவப்படும் எல்லா சர்க்கரை ஆலைகளையும் கூட்டுறவுத் துறையிலேயே அனுமதிக்க சர்க்கார் ஒரு முடிவு எடுப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது கட்டப்பட்டு வருகிற ஆலைகளில் இரண்டு கூட்டுறவுத் துறையிலும், மூன்று தனியார் துறையிலும் அமையும். இனிமேல் நான் லைசென்ஸ்

21st January 1965]

அல்லது அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டிருப்பது, கூட்டுறவுத்துறையில் 3, தனியார் துறையில் 4. எல்லா ஆலைகளையும் கூட்டுறவுத் துறையில் வைக்கவேண்டும் என்றால் அதற்குப் போதிய நிதி வசதி கிடையாது. ஆகவே நமக்குத் தொழில் வளரவேண்டும், பண்டங்கள் அதிகம் உற்பத்தியாக வேண்டும் என்பதால் எந்த எந்தத் துறையில் கோரிக்கை வந்தாலும், அவற்றைக் கொடுக்க சர்க்கார் ஆலோசிக்கும்.

திரு. கே. பொன்னையன்: தலைவர் அவர்களே, சர்க்கரைக் கட்டுப்பாட்டை எடுத்துவிடப் போவதாக பேச்சு அடிபடுகிறதே, அப்படி நீக்கப் போவதாக உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது எனக்குத் தெரியாது. மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டும்.

*43 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. ம. கமலநாதன் சார்பில்): கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி வட்டத்தில் சிறிய அளவில் சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்க யாருக்கேனும் லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை.

எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை

*44 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. ம. கமலநாதன் சார்பில்): கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவுவது எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய அரசாங்கம் சென்னைக்கருகிலுள்ள மணலி என்னுமிடத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையை நிறுவ உத்தேசித்துள்ளது. பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஏ. மதியழகன்: பூர்வாங்க வேலைகளில் நில ஆர்ஜிதம் போன்றவைகள் எவ்வளவு தூரம் முடிந்திருக்கின்றன? அது பற்றிய விவரங்கள் கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிலம் வாங்கியாய்விட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மணலியில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மணலியில் நிலம் வாங்கியாய்விட்டதென்றால், அந்த நிலத்தின் மதிப்பு எவ்வளவு போடப்பட்டது?